அறிவிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம், தளி பகுதி பழங்குடி இன மக்கள் வசிக்கும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், அரசு அறிவித்துள்ள பத்து புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுள் ஒன்றினை தளி பகுதியில் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்யுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அவரின் அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் உரியவாறு பரிசீலனை செய்து, அரசு தகுந்த ஆணை பிறப்பிக்கும்.

254—

ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்தல்

வினா எண் 45—திரு. அ. நாஞ்சில் முருகேசன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராஜாக்கமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட ராஜாக்கமங்கலம் மற்றும் கணபதிபுரம் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், ராஜாக்கமங்கலம் வட்டார ஒன்றியம், ராஜாக்கமங்கலம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் அறுவை அரங்குடன் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இதே வட்டார ஒன்றியத்திலுள்ள கணபதிபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

255—

துணை சுகாதார நிலையங்கள் அமைத்தல்

வினா எண் 62—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டுப்பாளையம் தொகுதி, காவலிபுதூர், மேடூர், புஜங்கனூர், வெள்ளப்புரம் மற்றும் மங்களக்கரைப்புதூர் ஆகிய இடங்களில் துணை சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மேட்டுப்பாளையம் தொகுதி, காவலிபுதூர், மேடூர், புஜங்கனூர், வெள்ளப்புரம் மற்றும் மங்களக்கரைப்புதூர் ஆகிய இடங்களில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

256—

மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

வினா எண் 65—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஊராட்சி ஒன்றியம், சிறுமுகை ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

257—

மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

வினா எண் 66—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2012 மே 16]

(ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, சிவியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஊராட்சி ஒன்றியத்தில் சிவியூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. காரமடை பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சிவியூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

258—

மருத்துவர்களை நியமித்தல்

வினா எண் 431—திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விருத்தாசலம் அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகளின் செயல்பாட்டினைக் கருத்திற்கொண்டும், மருத்துவர் மறுசீரமைப்பின்படியும், தற்போது விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு கூடுதலாக ஆறு புதிய மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, அப்பகுதியிலுள்ள ஏழை எளிய மற்றும் அனைத்து பொதுமக்களுக்கும் உரிய மருத்துவ சிகிச்சையினை